# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை - 2015
## தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம் - 10** **நேரம் : 2.00 மணித்தியாலயங்கள்**

சுட்டெண்: ..........................................

புள்ளிகள் : 100

---

**பகுதி II**

**01) சுருக்கமான விடை தருக.**

01) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.

"நைவீர லீர்மைந்தீ ரினித் துயரா னாடிறந்து"

02) நேர்முக வருணனையாளனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டு தருக.

03) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். இதனை செயப்பாட்டுவினை வாக்கியமாக எழுதுக

04) "சுதந்திர இந்தியாவே எனது நோக்கம்" எனக் காந்தியடிகள் கூறினார். இவ் வாக்கியத்தின் தலைமைத் தொடர், சார்புத்தொடர், நிரப்பித்தொடர் யாவை?

05) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவை நீக்கி எழுதுக.
இங்கு காணப்படுவதெல்லாம் எனக்குரியவை ஆகும்.

06) கலை என்னும் சொல் பெயராகவும் வினையாகவும் அமையக்கூடிய வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைக்குக.

07) தொழில் முறைக் கடிதம் ஒன்றை எழுதுவதற்கான படிமுறைகளை ஒழுங்குபடுத்துக.
உள்முகவரி, விடயத்தலைப்பு, முகவரி, செய்தி, ஒப்பம், விளிப்பு, முடிப்பு

08) "வேரெடுத்துச் சுதந்திர நற்பயிர் வீழ்ந்திடச் செய்தல் வேண்டிய மன்னர்" இதில் இடம் பெற்றுள்ள அணியினை விளக்குக.

09) வேற்றுமைத்தொகை என்றால் என்ன? உதாரணம் தருக.

10) சுருக்கம் ஒன்றை எழுதும் போது தவிர்க்க வேண்டியது.
மையக்கருத்தை வெளிப்படுத்தல், உதாரணந்தருதல், தொகைமொழி பயன்படுத்தல், தொடர்புபடுத்தல்.

(20 புள்ளிகள்)

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ) தொடர்ச்சியான யுத்தம் நமது நாட்டினை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. நாட்டின் அபிவிருத்திக்கும் சகல துறைகளின் முன்னேற்றத்திற்கும் சமாதானத் தீர்வே அவசியம் எனப் பல அறிஞர் கருதுகின்றனர் என்பதை விளக்கிக் கட்டுரை வரைக.

ஆ) பெண்கள் போற்றுதற்குரியவர்கள் குடும்பத்திலும் சமுகத்திலும் சிறப்புடையவர்கள். கலை, கலாசாரம் பேணுபவர்கள். இன்றைய பெண்கள் கல்வி, தொழில், சமூகத் தொண்டில் ஆண்களோடு சமமானவர்களாக விளங்குகின்றனர். பெண்களை மதிக்க வேண்டும் என்ற கருத்துப்பட மகளிர் தினத்தை முன்னிட்டு நீர் நிகழ்த்தும் மேடைப் பேச்சு.

இ) தொலைக்காட்சி பார்ப்பதனால் ஏற்படுகின்ற சாதக பாதகம் பற்றி இரு நண்பர்களுக் கிடையேயான உரையாடல்.

ஈ) ''தாயிற் சிறந்த கடவுளுமில்லை'' எனும் பொருள்பட தாய்மையின் உயர்வை விளக்கி சிறுகதை எழுதுக.

(25 புள்ளிகள்)

**03) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் உமது வசன நடையில் எழுதுக.**

எழுத்துக்களால் சொல்லும், சொற்களால் மொழியும் அமைகிறது. மொழி வளர்ச்சியின் அளவு கோலைக் கொண்டு சில சமயம் அம்மொழி பேசும் மக்களின் மன வளர்ச்சியும் வாழ்க்கை முன்னேற்றமும் கணிப்பிடப்படுவதும் உண்டு. ஏனெனில் மக்களின் வாழ்க்கைச் சூழல் சிந்தனைத்திறன் முயற்சி வேகம் ஆகியவற்றை அடியொற்றியே அவர்களின் முன்னேற்றம் அமையும். அம் முன்னேற்றத்திற்கு எல்லா வகையிலும் வேகமுடன் இயங்கி வருவது மொழியும் அம் மொழியின் வளர்ச்சி ஆதாரமான சொற்பெருக்கமும் ஆகும். வளர்ச்சிப் போக்கில் புதிய கருத்தையோ அல்லது உணர்வையோ ஏதேனும் ஒரு சொல் வடிவில் மனிதன் மற்றவர்கட்கு உணர்த்த முற்படுகின்றான். இவ்வாறு கருத்து உணர்த்தும் புதிய சொல் காரண அடிப்படையில் அமைந்த சொல்லாகவோ அல்லது அடையாளம் காட்டும் இடுகுறிச் சொல்லாகவோ அமையும். மேலும் ஒரு பகுதியினர் வேறு ஒரு பகுதியைச் சார்ந்த மக்களோடு உறவாடும் போது அவர்களிடமிருந்து புதிய செய்திகளை அல்லது கருத்துக்களைப் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்தகைய கருத்தையோ செய்தியையோ குறிக்கும் சொற்களும் இயல்பாகவே அவர் தம் மொழியில் இடம்பெற நேர்கிறது. இவ்வாறே ஒவ்வொரு மொழியும் தனக்குத் தானே உருவாக்கிக் கொள்ளும் சொற்களோடு பிற மொழிச் சொற்களையும் காலப்போக்கில் ஏற்றுக் கொண்டு வளர்கின்றன. இவ்வாறு ஒரு மொழியில் வந்து சேரும் சொற்கள் அந்த மொழியின் திருத்தங்களைப் பெற்று செம்மையடைகின்றன. காலப்போக்கில் இத்தகைய சொற்கள் அம் மொழியின் மூலச் சொற்கள் போன்ற தோற்றத்தையும் பெற்று விடுகின்றன.

(10 புள்ளிகள்)

**04) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.**

நெல் மூக்கு; கடுகுக்கண்; காற்றில் நீந்தும்.
நிலவெனவே பஞ்சுடலாம்; நெஞ்சம் தன்னில்
வெள்ளம் போல் புத்துணர்ச்சி; விம்மும் மூச்சில்
விடுதலையின் மென் கீதம் விண்ணும் மண்ணும்
கொள்ளை கொள் தனிக்காதல் கொழுந்து வண்ணம்
கொத்தின்றிக் கூடு கட்டி வாழும் கொற்றம்
கள்வர் தம் பயமூட்டும் செல்வம் காணாக
கலைஞானம் கண்டதடா, சின்னஞ்சிட்டு.

1) இப்பாடலில் குறிப்பிடப்படுவது எது?
2) கவிஞர் அதன் தோற்றத்தை எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?
3) கள்வருக்கு பயமில்லாச் செல்வம் எது?
4) “வெள்ளம் போல புத்துணர்ச்சி” என்னும் தொடரின் பொருள் யாது?
5) இப்பாடலில் கையாளப்பட்ட இணைமொழி யாது?

(10 புள்ளிகள்)

**05)** இன்றைய காலகட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுவதால் சமூகம் பல சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்கின்றது. இதனைக் கருத்திற் கொண்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் 100 சொற்களில் துண்டுப் பிரசுரம் தயாரிக்குக.

அல்லது

உமது பாடசாலையில் நடைபெற்ற தமிழ்மொழித் தின விழா பற்றி 100 சொற்களில் அறிக்கை எழுதுக.

(15 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education